

மாடர்ன் தியேட்டர்ஸ்
மந்திரி
குமாரி

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| **எஸ். ஏ. நடராஜன்** | ... | பார்த்திபன் |
| **எம். ஜி. ராமச்சந்திரன்** | ... | வீரமோகன் |
| **எம். என். நம்பியார்** | ... | ராஜகுரு |
| சி. வி. நாயகம் | ... | நீதிதேவர் |
| **எஸ். எஸ். சிவசூரியன்** | ... | சாந்தவர்மன் |
| கே. வி. சீனிவாசன் | ... | அப்பாவி |
| கே. கே. சௌந்தர் | ... | தீக்கண்ணன் |
| ஏ. கருணாநிதி | ... | பூலோகம் |
| ராஜசேகரன் | ... | ஐராவதம் |
| சுப்பையா | ... | மாட்டுக்கார பையன் |
| **மாதுரிதேவி** | ... | அமுதவல்லி |
| **ஜி சகுந்தலா** | ... | ஜீவரேகா |
| முத்துலக்ஷ்மி | ... | சற்பகம் |
| கே. எஸ். அங்முத்து | ... | லோகநாயகி |

---

நடனம் :

*லலிதா—பத்மினி—ராகினி*
*குமாரி கமலா, குமாரி வனஜா.*

இசை அமைப்பு :

*ஜி. ராமநாதன், மாடர்ன் தியேட்டர்ஸ் வாத்தியகோஷ்டி*

பின்னணி இசை :

*எம். எல். வஸந்தகுமாரி* — *கே. வி. ஜானகி*
*பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி)* — *பி. லீலா*
*ஏ. பி. கோமளா* — *யூ. ஆர். சந்திரா*
*திருச்சி லோகநாதன்* — *பி. லலிதா*

கதை, வசனம் : **மு. கருணாநிதி**

டைரக்ஷன் : **டி. ஆர் சுந்தரம்,** எல்லிஸ் **ஆர். டங்கன்.**

விநியோகம் :

# விஸ்வநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

---

*பிரபாத் பிரஸ், வேலூர். போன் 92*

# " மந்திரி குமாரி "—கதைச்சுருக்கம்

கொள்ளையடிப்பது அவனுக்கு ஒரு கலை. கொலை செய்வது சர்வ சாதாரண பொழுது போக்கு. இப்படி ஒரு கொடியவன் முல்லை நாட்டில் உலவுகிறான். மக்களின் தலைகளை பந்தாடுகிறான். நாட்டினரின் ஓலம் அரசன் சாந்தவர்மன் சபா மண்டபத்திற்கு எட்டுகிறது. சாந்தவர்மன் ஒரு உருட்டு சட்டி பொம்மை. ஆனால் நல்லவன். கள்வர்களை எட்டே நாளில் பிடிக்கவேண்டுமென்று ஆணையிடுகிறான். தளபதி வீரமோகனிடம் உத்திரவு நீட்டப்படுகிறது. ராஜகுரு இடையே தலையிட்டு வேள்வி செய்து கள்வர்களை வேக வைக்கலாமென்கிறார். வீரமோகனின் விவேக மொழிகளுக்கு முன் ராஜகுருவின் பேச்சு எடுபடவில்லை. மந்திரி நீதிதேவரும் ராஜகுருவின் யோசனைக்கு மறுப்புரை கூறுகிறார்.

நீதிதேவரின் மகள்தான் அழகே உருவெடுத்த அமுதவல்லி. அவளும் அரசன் மகள் ஜீவரேகாவும் ஆருயிர் தோழிகள். ஜீவரேகாவுக்கு ஒரு காதலன்......வீரமோகன். ஜீவாவும் மோகனும் நீல நிலவையும், வசந்த காலத்து தென்றலையும் விணாக்குவதேயில்லை. அடிக்கடி இன்ப சந்திப்புகள்.

ராஜகுருவின் மகன் பார்த்திபன். ஒரு நாள் மாலை ஜீவரேகாவை பார்த்துவிடுகிறான். அவள்மீது ஆசை வெறி அலை மோதுகிறது. நதிக்கரையில் தன்னை சந்திக்குமாறு ஓலை எழுதுகிறான். தன் தோழன் அப்பாவியிடம ஓலையை கொடுத்து ராஜகுமாரியின் அந்தபுரத்தில் போடச்சொல்லுகிறான்.

ஆனால் அங்கு...அந்த மடலை...மந்திரிகுமாரி பார்த்துவிடுகிறாள். அவளுக்கு ஜீவரேகாவின் மீது சந்தேகமும், வெறுப்பும் உதயமாகிறது வீரமோகனையும—பார்த்திபனையும் தன வலைக்குள் போட்டுக்கொண்டு ஜீவரேகா கறுப்புக்காரசி போல் நடிப்பதாக அவள் தவறாக நினைக்கிறாள். அதை சோதிப்பதற்காக...மறுநாள் ஜீவரேகாவை தொடருகிறாள். ஜீவா வழக்கமபோல் வீரமோகனிடம் போகிறாள். அமுத

வல்லியை பார்த்திபன் பார்த்து விடுகிருன். காம வேட்டைக் காரனுன அவன் ஜீவரேகா வராத கவலையை மறந்து அமுத வல்லியிடம் சரசம் பேசி அவளை மயக்கி விடுகிருன். பார்த்திப னும் அமுதவல்லியும் இப்போது காதலர்கள்

கள்ளர் கூட்டத்தை தேடிச்சென்ற வீரமோகன் கள்வர் தலைவனை பிடித்து விடுகிருன். யார் அந்தக்கள்வர் தலைவன்? தளபதி ஆச்சர்யபடுகிருன். ராஜகுருவின் மகன் பார்த்திபன் தான். அரசனின் சபா மண்டபத்தில் ஒரே குழப்பம் ராஜகுரு வின் பசப்பு வார்த்தைகள்—பாகு மொழிகள் எதுவும் எடுபட வில்லை. மனக்குழப்பமடைந்த மன்னன் வழக்கு விசாரணையை மந்திரி நீதிதேவரிடம் ஒப்புவிக்கிருன் கருணையே உருவெடுத்த நீதிதேவர் காளி பக்தர். நீதி வழங்கும் பொறுப்பை தேவியிடம் அளித்து மன்ருடுகிருர். கள்வனின் காதலியான அமுதவல்லி காட்டாற்று வெள்ளத்திலகப்பட்ட துரும்பாகிருள். துடிக் கிருள். பார்த்திபன் விடுதலையடைந்து விட்டால் அவனை சீர் திருத்தி விடலாமென நம்புகிருள். தந்தையிடம் கெஞ்சுகிருள். சொந்த விஷயத்துக்காக கொள்கையை கொல்லாத நீதிதேவர் பார்த்திபனுக்கு தூக்கு தண்டனை விதிக்கிருர்.

தேவியின் மீது பாரத்தை போட்டு பிரார்த்திக்க வரும் போது தேவியின் சிலைக்குப்பின்னுலிருந்து ஒரு குரல்—“பார்த் திபன் குற்றமற்றவன் அவனை விடுதலை செய்” என்று கிளம்பு கிறது. நிதானமிழந்து நீ தி தே வ ர் மன்னனிடம் ஓடுகிருர். தூக்கு மேடையில் சா வை தழுவ இருந்த பார்த்திபன் காப் பாற்றுபடுகிருன். வீரமோகனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தேவியாவது பேசுவதாவது என்று திகைக்கிருன். ராஜகுருவின் எண்ணப்படி வீரமோகன் நாடு கடத்தப்படுகிருன். பார்த்திபன் தளபதியாகிருன். அமுதவல்லிக்கும் கணவனுகிருன். நாடு கடத் தப்பட்ட வீரமோகனை ராஜகுரு மனங்கொண்டமட்டும் நையப் புடைத்துவிட்டுவருகிருர். இதன் காரணமாய் மன்னருக்கும் குருநாதருக்கும் மனக்கசப்பு வளர்கிறது. அந்த நிகழ்ச்சி குரு நாதர் மனதில் பேராசைக்கனலை மூட்டுகிறது. தானே அரசனுக கனவு காண்கிருர். தீக்கண்ணன் என்ற துரோகி கிடைக்கிருன. அரசனைக்கொல்ல சூழ்ச்சி முடிவடைகிறது.

காதலனைத்தேடி ஜீவரேகா ஓடிவிடுகிறாள். அவளை இப்போதாவது தன் விருந்தாக்கிக்கொள்ள நினைத்த பார்த்திபன் அப்பாவியை விட்டு அவளை தன் குகைக்கு கொண்டு வரச் செய்கிறான். அவளுடைய கற்பு சூறையாடப்படும்போது சந்தேகமடைந்து, கணவனைப் பின் தொடர்ந்து குகைக்கு ஆண் உடையில் வந்த அமுதவல்லி குமுறுகிறாள். பார்த்திபனும் அமுதவல்லியும் தீப்பொறி பறக்க பேசுகிறார்கள். அமுதவல்லி ஜீவரேகாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறாள். அமுதாவை பழிவாங்க பார்த்திபன் திட்டம் தீட்டுகிறான்.

ஜீவாவை இழந்த வீரமோகன் அவளை தேடி அலைகிறான்

1. அமுதவல்லியைக் கொன்று விடும் நோக்கத்துடன் அவளிடம் சாகசம் பேசி மருத மலைக்கு அழைத்துப் போகிறான் பார்த்திபன்.

2. இங்கே ஜீவரேகாவை தேடிக்கொண்டு அரண்மனைக்குள் நுழைகிறான் வீரமோகன்.

3. வஸந்த மண்டபத்தில் உறங்கும் அரசனைக்கொல்ல ராஜகுரு கட்டாரியுடன் நுழைகிறான்.

4. தோழியின் வீட்டில் துடிக்கும் உள்ளத்துடன் குமுறிக் கிடக்கிறாள் ஜீவரேகா.....

இவர்களின் முடிவுதான் என்ன?

பதில் திரை சொல்லும்

# மந்திரி குமாரி—பாடல்கள்

## தர்பார் நடனம்

*ஆதவன் உதித்தான்; தாமரை மலர்ந்தது!*
*காதலில் கலந்தது இரண்டும்!*
*மாமலர் நாடி மகிழ்வுடனே*
*மதுவுண்டு வண்டுகள் திரிவதைப்பார்!*

*ஆடுதே அழகாய்! அழகாய் ஆடுதே!*
*ஆரண்ய வீதினிலே மாமயில்கள் கூட்டமாய்*
*அகம் மிகக்களித்தே நடம்புரியும் எழில் பாரிதோ*
*அழகுறு தோகையும் விரித்தாடுது ஒயிலாகவே*
*ஆனந்தம் கொண்டேதான் கார்முகில் காணவே*
*அமைவுடன் சீர்பதம் பெயர்ந்தாடு மின்பக்காட்சி பார்!*

*கானதனில் வாழும் மடமான்களினமே*
*காண அழகாக மிக சிங்காரமாய்*
*கண்கவர் மருண்ட விழிப்பார்வையுடனே*
*ஒன்றாகவே துள்ளி உல்லாசமாய்*
*ஓடி விளையாடுகிற காட்சிதனைப்பார்!*

*ஏர் கலப்பை தோளிலேந்திய—உழவோர்*
*எருதை ஓட்டிக்கொண்டேதான்*
*ஏகிடும் காட்சி பார்!*

*கஞ்சி கொண்டுபோகும் பெண்டீரும்—பயிர் வாழவே*
*கழனியில் வேலை செய்வோரும்—அந்திப்போதிலே*
*சேர்ந்து கைவீசியே திரும்பிடும் காட்சிதனைப்பார்*

## ராஜகுமாரி

*ஆஹா ஹா ஹா வாழ்விலே ஓர் ஆனந்தம்*
*இனி—பெறுவோம் நாமே நாளுமே ஓ மாரனே!*
*யாழோடிசை போல் கூடியே* (வாழ்)
*மா நதி மீதிலே தோணியுலாவியே*
*காதலிசை பாடிடவே ஆசை அதிகமாகுதே!*
*மா வீரனே வாராயே ஏகுவோம்!*

மாமோகனு யாரேனுமே காணுதுமே பூங்காவிலே
மலைமேலே தாவும் முகில் போலவே
ஓடியே நாம் ஆடியே (வாழ்)

வானகமேவியே மாமதி மீதிலே
நாமாடலாம் வாராயே நீயுமே
வானோரிலும் மேலான உன் மீதிலேதான் மாலாகியே
முகில் காண ஆடும் மயில் போலவே
பாரீரிதோ நாணுடுறேன் (வாழ்)

## குமாரி கமலா நடனம்

இசைக்கலையே இனிதாமே மேலான
கானத்திலே ஆனந்தம் பெற்றார் யாரே? (இசை)
வானோர் பாலர் முதலாய்
ஓருயிர் இனமும் உளம் மயங்கும் கீத நாதம்
தொனி கேட்டுமே—இன்னிசை
தொனி கேட்டுமே பொல்லாத நாகமும்
தன்னை மறந்தாடும் நிலை காணும் உலகினிலே (இசை)
வீணையில் எழும் நாதமோடு புதுமையும்
கூடிடவே குரலே தெளிவாய்
மேலான இனிய ராக நயமுடன்—சுதியும்
தாளம் நன்றிணைந்திடவே
பாவமொடு தான் சொல்லும் எளிதாய்—பொருள்
மேவும் இசைப்பாடல் தனைப்பாடினால்
இதயமீது உவகையே துள்ளிடவே
கலையை யாவருமே புகழ்வாரே
கிடைக்காததே சங்கீத ஞானமே
வையமீதிலொரு நிதியாமே—புகலரிய (இசை)

## மந்திரிகுமாரி

பெண்களினால் உயர்வாகிடுமே
புவி வாழ்வது தானே
வீரர் தம்மை நாட்டினுக்கீந்த
விளங்கும் மேன்மையாலே (பெண்)

காணில் வாழும் தவஞானி
காவியமே புனையும் கவிஞன்—கலை
ஆர்வத்தோடு வாழும் அறிஞன்—தமை
நாட்டினுக்கே அளித்தோர் யாரோ? (பெண்)

தீர எண்ணித்துணிந்தே தான்
காதலரை இங்கு தேர்ந்தெடுப்பார்—மகிழ்
வோடு த்யாக வாழ்வே வாழ்வார்—எது
நேரிடினும் மனமே மாறார் (பெண்)

## மந்திரிகுமாரி—பார்த்திபன்

மந்திரிகுமாரி: உலவும் தென்றல் காற்றினிலே
ஓடமிதே நாம் மகிழ ஊஞ்சலாடுதே!

பார்த்திபன்: அலைகள் வந்து மோதியே
ஆடியுன்றன் பாட்டுக்கென்றே தாளம் [போடுதே]

மந்திரிகுமாரி: உயர்ந்த மலையும் உமது அன்பின்
உயர்வை காட்டுதே!

பார்த்திபன்: இதயம் அந்த மலைக்கு எது
அன்பைக் காட்டவே

மந்திரிகுமாரி: தெளிந்த நீரைப்போன்ற தூய
காதல் கொண்டோம் நாம்!

பார்த்திபன்: களங்கம் அதிலும் காணுவாய்
கவனம் வைத்தே பார்!

மந்திரிகுமாரி; குதர்க்கம் பேசி என்னை மயக்க
எங்கு கற்றீரோ?

பார்த்திபன்: உனது கடைக்கண் பார்வை காட்டும்
பாடம் தன்னிலே!

இருவரும்: உலக வாழ்க்கை ஆற்றினிலே
காதலெனும் தோணிதனில் ஊர்ந்துசெல்லுவோம்

## குமாரி வனஜா நடனம்

கண்ணடிச்சு யாரை நீயும் கண்ணி வைக்கப் பார்க்குறே
கண்ணி வைக்கப் பார்க்குறே என்னையா ஏய்க்கிறே (கண்)
என்னைக் கண்டு ஆசை கொண்டு ஏனோ சும்மா ஏங்குறே
ஏனோ சும்மா ஏங்குறே எண்ணி எண்ணி வீங்குறே (கண்)

தொகையரு

மன்மத குஞ்சே! எ! மந்தியவதாரனே
ஒன்முகம் தன்னையே ஒரு கண்ணாடியில் பாரேன்

பாட்டு

கொல்லைக்காட்டு நரியைப் போலே பல்லைப் பல்லைக் காட்டுறே
இல்லை ஒனக்கீடுமே இருச்சவாய் வீரரே
நொள்ளைக் கண்ணும் யானைக்காதும் காண ரொம்ப ஜோரையா
காண ரொம்ப ஜோரையா கண்ணாடியைப் பாரையா

தொகையரு

குண்டுசட்டி வயிறழகா குடமிளகா மூக்கழகா
நண்டுக்கால் நடையழகா பாலைவனத் தலையழகா

பாட்டு

ஒட்டகத்தைப் போல நீண்ட ஒல்லியான ரூபனே
ஒன்னழகைக் காணவே கண்ணு ரெண்டும் போதுமா (என்)

## தளபதி பார்ட்டி கோரஸ்

அந்தி சாயிற நேரம்
மந்தாரைச் செடி யோரம்
ஒரு—அம்மாவைப் பார்த்து ஐயா
அடிச்சாராம் கண்ணு—அவ
சிரிச்சாளாம் பொண்ணு!
கொக்கர கொக்கர கொக்கரக்கோன்னு
குயிலைப்போல பாடிடுவா!—குயிலைப்........

கொக்கரக்கோ கொக்கரக்கோ
கொக்கர கொக்கர கொக்கரக்கோ

பல்லாக்கு போல நெளிஞ்சு ஆடி
பார்த்தவர் மனசை லாவிடுவா!—பார்த்தவர்........

பப்பரபூ பப்பரபூ
பப்பரபூ பப்பர பப்பரபூ

தத்தித் தத்தி அன்னம் போல
தாவியே நடையும் போட்டிடுவா!—தாவியே........

டர்ரரடண் டர்ரரடண்
டர்ரர டர்ரர டர்ரரடண்

பக்காப் பொண்ணு ஐயாமேலே
சொக்குப்பொடியும் தூவிட்டா!—சொக்குப்......
தக்கிடஜம் தக்கிடஜம்
தக்கிட தக்கிட தக்கிடஜம்
அந்தி சாயிற நேரம்...சிரிச்சாளாம் பொன்னு

## கற்பகம்—பூலோகம்

கற்பகம்: பெறக்கப்போகுது!—பாரு பொறக்கப்போகுது
பூலோகம்: என்ன? எங்கே? யாருக்கு பொறக்கப்போகுது?
கற்பகம்: பத்துமாசம் சென்றவுடன் பாரு
தெரியும் உனக்கும் எனக்கும்
கொஞ்சி கொஞ்சி மகிழ்ந்து
நாமும் குறையில்லாமே வாழ்ந்திருக்க (பெற)
பூலோகம்: (வசனம்) அப்படிச்சொல்லு
கற்பகம்: (வசனம்) ஐய
மூலைத்தெரு சோசியனை முந்தா நாளும் கேட்டேன்
பத்துமாசம போனால் நமக்கு
பிறக்கும் நல்ல காலமின்னான்
பூலோகம்: ஏழை நாட்டு சனியன் போலே
எங்கம்மா இருக்கையில்
எப்படி பெறக்கும் நல்லகாலம்
கற்பகம்: ஏழாமடத்தில் ராஜாவாம்
எனக்கும் உனக்கும் கல்யாணம்
எப்படியும் நடக்குமின்னு
எடுத்துச்சொன்னான் சோசியன்
பெறக்கப்போகுது—பாரு - பெறக்கப்போகுது
எப்படியும் பத்துமாசம
எனக்கும் உனக்கும் நல்லகாலம் (பெற)

## ராஜகுமாரி

எண்ணும் பொழுதில் இன்பம்—பெருகி என்
உள்ளம் மகிழலானேன்
மாவீரர் பணியும் ஜெயதீரா
உலகினிலே இணையில்லா உமது புகழ் (எண்)
மாலை நன்னேரம் மாலை கொண்டே நான்
ஆருயிர் மோகனின் மேனியில் அணிவேன்

மகிழ்சியோடு நான் மார்புறத்தழுவி
கலந்து வாழ்வில் என்றும் சுகமே காண்பேன் (எண்)

## லலிதா—பத்மினி—ராகினி நடனம்

ஓ......ராஜா......ஓ......ராணி!
மிக—ஏழை எளிய எங்க மனசு குளிர இந்த
குடிசை வழியே வாங்க!—(ஓ)
அழகு ராணியே!
புது—மனமே தருமா மலரே இதுதான் நீயே பார்
மலரே இதுதான் நீயே பார்
ஒரு ஜோடி மாடப்புறா!
இணைபிரியோமே கூரைமீதிலே
பாடுதுபாரே ஆசைகொண்டுதான்!......ஆ......
ஆசைக்கொள்ளாதே ஐயா எந்தன்மேலே
கோவங்கொள்வாங்க இந்தராணி உன்மேலே
மோகம் பொல்லாதே வேறே பெண்மேலே?
ராஜாத்தி பாரிதோ ரோசாப்பு போலே......
மீசை உள்ள ராஜா கள்ளத்தனமே
கூடாது சாமி வீணே பேராசையாலே
மோசம் செய்யாதே ஆகாதுதானே!
வாலிபம் நில்லாதே எந்நாளும் தானே
நீதென்னிடாதே கண்ணுனை என் வீரா!
ஊரெல்லாம் நீயே சென்றாலும் தானே
அம்மா போலே அழகு எங்கேயேனும் காணவும்
ஆகுமோ சாமி!
ஓ......ராசா எந்நாளும் இன்பமாகவே ஒன்றாய் வாழுவீரே!

## மாட்டுக்கார பையன்

தொகையரு

ஊருக்கு உழைப்பவண்டி
ஒரு குற்றம் அறியானடி
உதைப்பட்டு சாவானடி—எருமைக்கண்ணுக்குட்டி

பாட்டு

நல்லதுக்கு காலமில்லே
நடப்பதெல்லாம் வெளிப்பகட்டு
சொல்லப்போனால் வெட்கக்கேடு—எருமைக்கண்ணுக்குட்டி

தொகையரு

ஏச்சிப்பொழைக்கிறவன்
ஏழடுக்கு மாளிகையில்
ஏகத்தாளம் போடுருனே
அவனை பேச்சை மறுக்கிறவன்
பிச்சை எடுக்கிருனே—எருமைக்கண்ணுக்குட்டி

பாட்டு

நாட்டுக்குத்தலைவனென்று நம்பும்படி பேசிவிட்டு
வேணசெல்வம் வாரியே போவாரடி
நாடுசெழிக்க வெண்ணி நாளெல்லாம் பாடுபடும்
ஏழைக்கிக்காலமில்லே எவனெவனே வாழுகின்ருர்—
எருமைக்கண்ணுக்குட்டி

## மந்திரிகுமாரி—ராஜகுமாரி

மந்திரிகுமாரி: மனம்போல் வாழ்வு பெறுவோமே!
இணைந்தே நேசமுடன் எந்நாளும்
நாம்—மகிழ்வோம் மெய்யன்பாலே
என்னுயிர் நாதன் குணமே—மாறி
நேர்மையாகினுர் புவிமேல்!

ராஜகுமாரி: இந்த நாளுன் வாழ்வில் சுபதினமே!
இன்பமே கொள்ளுவோம்! (மனம)

மந்திரிகுமாரி: பெண் மனம் ஒன்றை நினைத்தால்—அதை
திண்ணமாக செய்து முடிப்பாள்!

ராஜகுமாரி: உயர் காதல் வாழ்வு......
உயர் காதல் வாழ்வு பெறத்துடிப்பாள்!
உண்மை சேர் அன்பினுல் (மனம்)

## பார்த்திபன்—மந்திரிகுமாரி

பார்த்திபன்: வாராய் நீ வாராய்
போகுமிடம் வெகுதூரமில்லை நீ வாராய்

அமுதவல்லி: ஆஹா! மாருதம் வீசுவதாலே
ஆனந்தம் பொங்குதே மனதிலே!

பார்த்திபன்: இதனிலும ஆனந்தம் அடைந்தே இயற்கையில்
கலந்துயிர் விண்ணினைக் காண்பாய் அங்கே வாராய்

அமுதவல்லி: அமைதி நிலவுதே சாந்தம் தவழுதே!
அழிவில்லா மோனநிலை சூழுதே!

பார்த்திபன்: முடிவில்லா மோன நிலையை நீ—மலை
முடிவில் காணுவாய் வாராய்
அமுதவல்லி: ஈடில்லா அழகை சிகரமீதிலே
கண்டு இன்பமே கொள்வோம்!
பார்த்திபன்: இன்பமும் அடைந்தே இகம் மறந்தே
வேறுலகம் காணுவாய் அங்கே!
வாராய் நீ வாராய்
புலியெனத் தொடர்ந்தே புதுமான் நீயே வாராய்

**உழவன்**—தொகையரு

உபகாரம் செய்தவர்க்கே அபகாரம் செய்ய எண்ணும்
முழுமோசக்காரனை தானே முடிவிலே நாசமாவான்
பாட்டு
அன்னம் இட்ட வீட்டிலே கன்னக்கோல் சாத்தவே
எண்ணங்கொண்ட பாவிகள் மண்ணாய் போக நேருமே
தொகையரு
வேஷம் கண்டு மயங்கியே வீணாக ஆசைக்கொண்டு
மோசமும் போன பின்னால் மனவேதனையடைவதாலே
லாபமென்ன?

பாட்டு
பாலை ஊற்றிப் பாம்பை நாம் வளர்த்தாலும் நம்மையே
கடிக்கத்தான் வந்திடுப—அதை அடிச்சே கொல்ல நேர்ந்திடும்

**ராஜகுமாரி**

காதல் பலியாகி நீயும் தியாகத்தின் சின்னமாய்
நாட்டினர் நெஞ்சிலே ஓவியமே ஆகினாய்!
காண்பவர் யாருமே பெண்களின் தீரமே
உணர்ந்திட நீயுமே ஓவியமே ஆகியே!
தீயோன்மேல் காதல் கொண்டே இல்லற வாழ்விலே
தீராத துயரம் கண்டாய் வீண்பழி மேவினாய்!
தேசம் தன்னையே பாதுகாக்கவே
நாதனைக்கொன்றுமே நீதி தனை நாட்டினாய்!
நாட்டுக்கே பாடம் தன்னை போதிக்கும் தியாகச்சின்னம்
நாளும் உன கல்லறை மீதில் நாங்களும் கண்ணீர் சிந்தி
மலர்கள் தூவியே மானசீகமாய்!
அன்பு செய்வதன்றியே கைமாறு வேறில்லையே!

திரைக்குத்தயார் !



தியாகராஜ பாகவதர், ராஜகுமாரி,
ஸரோஜா, கிருஷ்ணன், மதுரம் நடித்த

# " அமரகவி "

கைவசமுள்ள படங்கள் :—

| | |
|---|---|
| திகம்பர சாமியார் | இன்பவல்லி |
| மந்திரி குமாரி | போஜன் |
| மங்கையர்க்கரசி | கிருஷ்ண பக்தி |

விபரங்களுக்கு :—

**விஸ்வநாதன் பிக்சர்ஸ்**

காரைக்குடி.

பிரபாத் பிரஸ், வேலூர்.—போன் 92